**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் - 2019**

சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் முறையே கைச்சாத்திடப்பட்ட 2018 ஒக்தோபர் 26 ஆம் திகதியிடப்பட்ட 3727- எஸ்ஆர்ஜ(சீஓஎல்) 5 மற்றும் 0618- எஸ்ஆர்ஜ(எஸ்எப்) ஆம் இலக்க கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் உள்ள IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னர் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு தற்போதைய சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் நிறுவனம் ஆனதுடன் மத்திய, வட மத்திய, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்கான நிறுவனங்கள் ஆகும். தரமான அத்தியாவசியமான சுகாதார சேவைகளுக்கு தொடர்ச்சியான கவனிப்பு மற்றும் உலகளாவிய அணுகுதலை வழங்குதல் என்ற கருத்தின் அடிப்படையில் ஆரம்ப மருத்துவ சிகிச்சை முறைமையின்(பீஎச்எஸ்) வினைத்திறன், சமபங்கு மற்றும் பதிலழிக்கக்கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். செயற்திட்டத்தின் செயல்நடடிக்கைகள் மூன்று கூறுகளின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன (அ) மத்திய, வட மத்திய, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் ஆரம்ப மருத்துவ சிகிச்சையினை மேம்படுத்துதல் (ஆ) சுகாதார தகவல் முறைமை மற்றும் நோய் கண்காணிப்பு திறனை பலப்படுத்துதல், கொள்கை அபிவிருத்தி, திறன் மேம்பாடு மற்றும் (இ) செயற்திட்ட முகாமைத்துவ ஆதரவு. கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 9,300 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில் , ரூபா 5,812 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 37.50 மில்லியனை கடனாகவும் மற்றும் ரூபா 1,938 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 12.50 மில்லியனை மானியமாகவும் நிதியழிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியால் உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,550 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் மிகுதி தொகையானது இலங்கை அரசினால் நிதியழிப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 திசெம்பர் 01 இல் தொடங்கி இருந்ததுடன் 2023 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவு கூற்றினையும் காசுப் பாய்ச்சலினையும பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் யாதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க கனக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்கு உட்பட்ட நபர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில்கள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆந் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயல்திட்ட வழிநடாத்தல் குழுவானது குறைந்த பட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது ஒன்று கூட வேண்டியிருந்த போதிலும், ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே ஒன்று கூடியிருந்தது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் களை மீறியமை. | நடைமுறையில் அங்கத்தவர்களை கூட்டங்களில் கலந்து கொள்ள வைப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. | வழிநடாத்தல் குழுவானது குறைந்த பட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது ஒன்று கூட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| நடவடிக்கை | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு பிரச்சினை | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் | அடையப் பெற்ற முன்னேற்றம் | | |
| | அலகுகள் | அலகுகள் | | |
| உபகரணங்கள் மற்றும் ஆலோசனை சேவைகள் முதலியவற்றின் பெறுகை (கொள்வனவு) | 28 | 23 | ரூபா 176.31 மில்லியன் மதிப்பீட்டு கிரயத்திலான 05 பெறுகைகளுக்கான கேள்வி மனு நடைமுறைகள் 04 முதல் 92 நாட்கள் வரை தாமதமாகியிருந்தன. | செயற்திட்ட நடவடிக்கைகளினை திட்டமிடுவதிலும் செயல் படுத்துவதிலும் உள்ள பலவீனங்கள். |

**முகாமைத்துவ பதில்** விபரணங்களை தயாரிப்பதற்காக ஆலோசகர்களின் உதவியை பெற்றுக் கொள்வதின் சிரமங்கள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டன. மேலும், தொலைதூர சர்வதேச ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கான பெறுகை 2023 வரை ஒத்தி வைக்கப்படும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** செயற்திட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு உரிய நேரத்தில் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான வடிவமைப்பினதும் மற்றும் மேற்பார்வை ஆலோசனையினதும் பெறுகை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சனை | | விளைவு | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நியதிகளின் குறிப்புக்களில் அமைச்சரயையினால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் தெரிவு குழுவின் நியமனத்தில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக, ஆலோசகர் தெரிவும் வேலை வாய்ப்பும் வழிகாட்டியின் 2.4.1 ஆம் பந்தியின் பிரகாரம், பெறுகை குழுவின் மேற்பார்வையின் கீழ் | ஆலோசகர்களின் தெரிவும் வேலை வாய்ப்பும் வழி காட்டல்களுக்கு முரணானது. | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் தெரிவு குழு (CCSC) நியமிக்கப்படும் வரை அமைச்சின் ஆலோசகர்கள் தெரிவு குழுவானது | தொடர்புடைய தெரிவு குழுவானது பெறுகை செயல் முறையின் தொடக்கத்தில் நியமிக்கப்பட வேண்டியதுடன் அனைத்து செயல் முறைகளிற்கும் குழுவானது பொறுப்பாக இருக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | மொத்த கிரய மதிப்பீடு மற்றும் ஆர்வத்தின் வெளிப்பாடு (EOI) என்பன தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | | ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | ஆலோசகர்கள் தெரிவும் வேலைவாய்ப்பும் வழிகாட்டியின் 5.1.1 பந்தியின் பிரகாரம், தரம் மற்றும் கிரயம் அடிப்படையிலான தெரிவு செய்தல் பெறுகை முறைக்கான நியம கால எல்லை 20 வாரங்களாகும். எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்ட பெறுகையினை மேற்கொள்வதற்கு கிட்டத் தட்ட ஒரு வருடத்திற்கு மேலான காலப்பகுதி எடுக்கப்பட்டிருந்தது. | வினைத் திறனின்மை | பெறுகை குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பால், நடைமுறையில், அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நேரம் இதற்கு காரணமாகும். | பெறுகையானது வழிகாட்டல்களுக்கு அமைவாக வினைத்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | ஆலோசகர்களின் தெரிவும் வேலைவாய்ப்பும் வழிகாட்டியின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகையின் கிரய மதிப்பீடானது யதார்த்தமான பாதீட்டு ஒதுக்கீட்டிற்கு ஏற்ப தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தத்தின் ஆரம்ப கிரய மதிப்பீடானது ரூபா 150.35 மில்லியனாகவும் உண்மை பெறுமதியானது ரூபா 320.41 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. இது 113 சதவீத அதிகரிப்பொன்றை குறித்துக் காட்டுகின்றது. | அதிகப்படியான கிரயம் | செயற்திட்ட தயாரிப்பு காலத்தின் போது பெறுகை திட்டமிடப்பட்டது எனவே மதிப்பீடுகள் அனுமானங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப் பட்டிருந்தன. | கிரய மதிப்பீடானது யாதார்த்தமானதாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) பெறுகைத் திட்டத்தின் பிரகாரம், செயற்திட்டமானது செயற்திட்ட பணிப்பாளருக்கு நிரல் அமைச்சிற்கும் 05 வாகனங்கள் உள்ளடங்களாக 67 மோட்டார் வாகனங்களை பெறுகை செய்வதற்கு திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும், பெறுகை செயல் முறையின் காலதாமதம் காரணமாக, செயற்திட்ட காரியாலயத்திற்காகவும் செயற்திட்ட காரியாலயத்திற்காகவும் செயற்திட்ட பணிப்பாளருக்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 8.18 மில்லியன் செலவு செய்வதன் மூலம் 2 வாகனங்கள் வாடகைக்கு பெறப்பட்டிருந்தன. | செயற் திட்டத்திற்கு மேலதிகமான கிரயம் செய்ய வேண்டி வரும். | ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் தேசிய பாதீட்டு திணைக்களத் திடமும் விசேட அங்கீகாரம் பெறப்பட்டது. இந்த பெறுகை 2019 நவம்பர் 11 அன்று விளம்பரப் படுத்தப்பட்டது. | மேலதிக கிரயத்தை குறைப்பதற்கு பெறுகை செயல்முறையை விரைவுபடுத்தவும். |
| (ஆ) திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது செயற்திட்ட காலம் முழுவதும் தொடர்வதற்கு திட்டமிடப்பட்டதுடன் ரூபா 340 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 2 மில்லியன் மொத்த தொகையொன்று இந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | | |
| (i) ஒட்டுமொத்த பயிற்சி திட்டத்தன் 0.11 சதவீதத்தினை குறித்துக் காட்டுகின்ற, ரூபா 0.67 மில்லியன் தொகையை செலவு செய்வதன் மூலம் | செயற்திட்டத்தின் இலக்குகளை அடைய முடியவில்லை. | மேம்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது சுகாதார அமைச்சிற்கு வழங்கப் படுவதற்கு கால தாமதமாகியிருந்ததுடன் | செயற்திட்ட நடவடிக்கைகள் செயற்திட்ட காலத்தின் போது சுமூகமாக நிறைவு செய்யப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பணியாளர்களில் 52 அங்கத்தவர்களுக்காக இரண்டு நாட்கள் நடத்தப்பட்ட நிதி மற்றும் பெறுகை பயிற்சி திட்டத்தை தவிர மீளாய்வாண்டின் இறுதி வரை வேறு எந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்திட்டத்தினால் நடத்தப்பட்டிருக்கவில்லை. | | ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதலை பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்டது. வெளிநாட்டு பயிற்சிகள் அந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு விண்ணப்பிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக கால தாமதமாகின. | வேண்டும். |
| (ii) | 2019 முதல் 2023 வரையிலான மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டியின் 08 ஆம் பந்தியின் பிரகாரம், வருடாந்த மனிதவள அபிவிருத்தி திட்டமானது அது செயல்படுத்துவதற்கு முன்னதாக செயற்திட்ட வழிகாட்டல் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டத்தின் அங்கீகாரம் 2020 பெப்ரவரி 18 வரை தாமதமாகியிருந்தது. அதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயற்திட்ட பணியாளர் களுக்காக நடத்தப்பட்ட உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் அங்கீகாரமின்றி இடம்பெற்றிருந்தது. | விதிகள் பிரமாணங்களுக்கு முரணானது. | இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய பிரதான மனிதவள அபிவிருத்தி திட்டத்திற்கான செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் அங்கீகாரம் 2020 பெப்ரவரி 18 அன்று பெற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. | மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை செயல் படுத்துவதற்கு முன்னதாக செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) | மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை செயல் படுத்துவதற்கான வழிகாட்டல்களின் பிரகாரம், செயற்படுத்தப்பட வேண்டிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுவதற்கு மனிதவள | விதிகள் பிரமாணங்களுக்கு முரணானது. | எதிர்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டல்களின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி குழுவினை செயற்திட்டத்தின் பணிப்பாளர் நியமிக்க வேண்டுமென்றபோதிலும், குழுவின் நியமனமானது 2019 ஒக்தோபர் 25 வரை தாமதமாக்கப்பட்டிருந்தது. குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் குழு கூட்டப்பட வேண்டுமென்ற போதிலும், மீளாய்வாண்டின் போது எந்தவொரு கூட்டமும் நடத்தப்பட்டிருக்கவில்லை. | | | மனிதவள அபிவிருத்தி குழு நியமிக்கப்படல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பிரச்சனை

| ஆளணி நிலை | கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வாளர் | 2018 திசெம்பர் 14 அன்று செயற்திட்டத்திற்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நிரல் அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தரொருவர் பதில் கடமை அடிப்படையில் உள்ளகக் கண்ககாய்வாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். | உத்தேசித்த கடமையை அடைய முடியாமல் போகலாம். | தேர்ந்தெடுக்கப் பட்ட அதிகாரியை முழுமையான கடமையில் இருந்து விடுவிக்க முடியாது என்பதனால் அவர் ஆசிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதலுடன் பகுதி நேர அடிப்படையில் நியமிக்கப்பட்டார். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படல் வேண்டும். |

## 3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடு

| கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| ரூபா 19.67 மில்லியன் கிரயத்தில் பெறுகை செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான பொருள் அளவை சபை கணக்கெடுப்பு மீளாய்வாண்டின் போது செயற்திட்ட அலுவலகத்தால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்து வதற்கான சாத்தியம் | மெய்மை யாய்வுகள் பூர்த்தியடைந்த வுடன் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சொத்துக்களின் மெய்மையாய்வுகள் நடத்தப்படல் வேண்டும். |